RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1853

# தாயுமானவரின் பிறப்பறுக்கும் கோட்பாடு

மா. மஞ்சுளா [அ, *], க. கலாவதி [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-- 641043, தமிழ்நாடு, இந்தியா.

# Principles of Thayumanavar

M. Manjula [a, *], G. Galavathi [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India.

* Corresponding Author: manjulasv1989@gmail.com

Received: 23-07-2022
Revised: 26-10-2022
Accepted: 06-11-2022
Published: 08-12-2022

## ABSTRACT

A man has six senses and that is why they are called human beings. Philosophers and literatures don't seek to correct, regulate and manipulate birds and animals whose sense varies from one to five. All these philosophers and literatures are there to correct human beings who have six senses. Humanity is when a man has various kinds of good qualifications. Body, bones, nerves, muscles, skin, etc. are important for a human body. In the same way love, truthfulness, gratitude, forgiveness, giving up, being a guru, bearing, suffering, and self-restraint are important for a human being. Only when a man realise that human body is impermanent, godliness occurs. Therefore, the body and soul do noble deeds in order to reach God. The purpose of birth is to die and what are the principles that should be followed from birth to death are described in this article through Thayumanavar's principles.

**Keywords:** Human, Theology, Values, Prey Communication, Salvation

## முன்னுரை

ஆறறிவு கொண்ட மனிதகுலம் முழுவதையும் மானுடம் என்ற சொல்லால் குறிக்கலாம். ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள பறவைகள், விலங்குகள் போன்றவற்றைத் திருத்தவும், சீரமைக்கவும், கையாளவும் தத்துவஞானிகளோ, இலக்கியங்களோ முறப்படுவதில்லை. மனிதனை மனிதனாக்கவே இத்தனை செயல்பாடுகளும், போராட்டங்களும் எனலாம். மனிதன் என்ற தன் மையிலிருந்து மானுடன் என்ற உயர்பண்பினை அடைய பலவகைப்பட்டத் தகுதிகள் தேவைப்படுகின்றன. உதிரம், எலும்பு, நரம்பு, தசை, தோல் போன்ற பல்வேறு தாதுக்களினால் ஆகிய உடம்பினுள் உயிர்நிலை பெறுகிறது. அதுபோல அன்பு, பொய்யாமை, கொல்லாமை, நன்றியுணர்வு, புலால் தவிர்த்தல், விட்டுக் கொடுத்தல், குருவினைப் போற்றல், துன்பம் பொறுத்தல், தன்னடக்கம் போன்ற முக்கிய விழுமியக் கருத்துக்களைத் தன்னுள் கொண்டதே மானுடமாகும். மானுட உடலானது நிலையற்றது என்பதை உணர்ந்து விழுமியக் கருத்துக்களை ஏற்க மனம் திரும்பும் நிலையில் இறைதாகம் ஏற்படும். அதனால் இறையருளைப் பெற்ற உடலமும் உள்ளமும் இறைவனைச் சென்றடைய விழுமியச் செயல்களை மேற்கொள்கின்றன. பிறப்பறுப்பதே பிறப்பின் நோக்கம் என்னும் தூயப் பயணத்தில், சமுதயத்திற்குத் தேவையான வழிகாட்டி நெறி முறைகளைத் தன்னுடைய பாடல்களின் வழியாக நெறிபடுத்தி விளக்கியுள்ளதைத் தாயுமானவரின் பிறப்பறுக்கும் கோட்பாடு என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கின்றது.

## தாயுமானவரின் சிறப்புகள்

தாயுமானவர் சமயம், கடவுட் கொள்கை, உயிரியல்பு, மனவியல்பு, வினையியல்பு, தத்துவயியல்பு, வழிபாட்டியல்பு, சித்தரியல்பு, வேதாந்தம், சித்தாந்தம், யோகம் ஆசனம், தனிமனித அறம், சமுதாயச் சீர்த்திருத்தக் கருத்துக்கள் போன்றவற்றைப் பற்றி சிறப்பான தொரு முறையில் விளக்கம் தந்த பெருஞானியாவார். தாயுமானவர் பாடல்களைத் தமிழ்மொழியின் உபநிடதம் என்று அழைப்பர். தாயுமானசுவாமிகள் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவார். இவர் இல்லறவாழ்வின் இன்பத்தினைச் சுவைத்துப்பின் துறவு வாழ்க்கையில் நாட்டம் கொண்டவர். சிற்றின்பம் துய்த்துப்பின் பேரின்பம் வேண்டி எம்பெருமானை நாடிச்சென்ற தத்துவ வித்தகரை மகாகவியும், தண்டபாணி சுவாமிகளும் தங்கள் பாடல்களின் வழிகூறி பெருமிதம் கொள்வதைக் காணமுடிகின்றது. நவீன காலத்தின் முன்னோடியாக விளங்கிய மகாகவி பாரதியார் கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவடிகளையும் புகழ்ந்த தன் திருவாயினால் தாயுமானப் பெருமானையும் போற்றிச் சிறப்பித்து அகம் மகிழ்கிறார்.

“என்றும் இருக்க உளம்கொண்டாய்

இன்பத்தமிழுக்கு இலக்கியமாய்

இன்றும் இருத்தல் செய்கின்றாய்

இறவாய் தமிழோடு இருப்பாய் நீ!

ஒன்று பொருள் அஃதுஇன்பம் என

உணர்ந்தாய்தாயுமானவனே

நின்ற பரத்து மாத்திரமோ

நில்லா இகத்தும் நிற்பாய் நீ!” (Bharathiyar, 2016)

என்ற இச்சிறப்புமிகு பாடலடிகளின் மூலம் தாயுமானவரின் பாடல்களில் அமைந்துள்ள வாழ்வியல் நோக்கும், தத்துவச் செழுமையும் மகாகவியை முழுமையாகப் பாதித்துள்ளதை அறிய முடிகின்றது. மேலும் தாயுமானவரின் திருப்பாடல்களில் மனம் ஒன்றிய தண்டபாணி சுவாமிகள் தனது நூலில்

“அத்தாயுமானவன் எனும்பெயர்த்தவசீலன்

அருளாட்சி எய்தி, அனிகூர்

வித்தார கவிபாடல் முதலாய வன்மைகளை

விசையரங்கையன்”

இவ்வாறு தாயுமானவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். இறைவனைக் கண்டஞானியாய், அவ்வின்பத்தை அனைவரும் பருக வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவராய், தத்துவ மேதையாய் விளங்கிய நல்லாத்மாவின் வாழ்க்கை அனைத்து மானுடர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## மானுடமும் மெய்யும்

மெய் வடிவமே மானுடமாகும். உடல் என்ற கருவியின் உதவியோடே மானுடம் இயங்குகின்றது. உடலினை மெய், யாக்கை, அங்கம், காயம், ஆக்கை, மேனி, தேகம், சரீரம், கூடு, ஜடம் என்றெல்லாம் பெயரிட்டு அழைப்பது மரபாகும். தங்கள் உடலை யேசான்றாக்கி வாழ்ந்தஞானிகள், சித்தர்கள், சான்றோகள், தத்துவ அறிஞர்கள் பலர் மானுடர்களுக்குப் பயன்படும் வகையில் காயம் குறித்தநெறி முறைகளைத் தமது நூல்களில் தொகுத்தும் வகுத்தும் வைத்து விட்டுச் சென்றுள்ளனர். இதனையாக்கை நிலையாமை என்னும் தலைப்பில் இலக்கியங்கள் மொழிகின்றன. உடலானது அழியும்

தன்மைக் கொண்டது என்ற பேருண்மையை ஏற்றுக்கொள்ள சில காலங்கள் தேவைப்படுகின்றது. உடலினை வெறுத்து ஒதுக்கிய சித்தர் பெருமக்கள் ஏராளம். மானுடர்கள் இவ்வுடம்பினை, அழகினைக் கூட்டும் சாதனமாகவும், உணவிற்காகவும், ஆண் பெண் இன்பத்திற்காகவும் வாழ்நாளைக் கழிக்கின்றனர் என்பதை மனதளவில் பொறாத சித்தர் பெருமக்கள்,

'ஒன்பது வாய்த் தோல்பை'

'ஊன் நிறைந்த காயம்'

'ஊத்தை சடலமடி உப்பிருந்த பாண்டமடி'

இவ்வாறுச் சாடித்தீர்க்கின்றனர். சித்தர் மரபில் வந்த தாயுமானவர், தானும் சித்தர் திருமூலர் மரபில் வந்தவர் என்பதை, மௌனகுரு வணக்கம் என்ற பகுதியில் திருமூலரை மந்திர குரு, தந்திர குரு, யோக குரு, மௌன குரு என ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அழைத்துப் பெருமிதம் கொள்கிறார். இக்கருத்தினை,

"மந்திர குரு வேயோகதந்த்ர குருவே மூலன்

மரபில் வந்த மௌன குருவே

சக்கரவர்த்தி தவராஜ யோகி எனும்

மிக்க திருமூலன் அருள் மேவுநாள் எந்நாளோ"

என்னும் பாடலடிகள் வழி பதிவு செய்துள்ளார் (Sivagyanam, 2016). சித்தர்களின் மரபினில் வந்த தாயுமானவர் ஏனைய சித்தர்களைப் போல மற்றவர்களின் உடலினைக் கண்டு தூற்றாமல், தன்னுடைய உடலினால் ஏற்பட்ட இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் பாடல்களின் மூலம் வருந்தித்தீர்க்கின்றார். எந்த சூழ்நிலையிலும் அஞ்சாமல் இருக்கும் மனது தன்னுடைய உடல் அழியும் நாளை எண்ணி பதைபதைக்கும் என்றும், வெள்ளத்தினால் இடிந்து விழும் ஆற்றங்கரை போல் அழியும் தன்மையுடைய உடலை நிலையானது என்று நினைத்த பாவி நான் என்றும் இறைத்தேடலே இன்பமாது என்று எண்ணாமல் மனமானது இரைத்தேடலுக்கே செலவிடும் வாழ்கையை இகழ்ந்தும் உடைந்தால் பயன்பெறாதுபோகும் மண்பாண்டம் போன்றது உடல் எனவெறுத்தும், இழிந்தஊன், நரம்பு, எலும்பு ஆகிய இவற்றால் கட்டபட்ட நிலையில்லாத உடலை சாடியும், இடத்தைக் காக்கும் நாய் போல இழிந்த ஊனாலும், இறைச்சியாலும் உடலைக் காத்து காலத்தை வீணடித்துள்ளேன் என்றும் கண்களின் துளைகள் இரண்டு, செவிகளின் துளைகள் இரண்டு, வாய் ஒன்று மூக்கின் துளைகள் இரண்டு, மலவாய் ஒன்று, எருவாய் ஒன்று என நாற்றம் மிக்க ஒன்பது துளைகளால் இடர் மட்டுமே ஏற்பட்டதாகவும், இளங்குழவி, குழவி, சிறார், விடலை, குமரன், இளைஞன், நடுத்தரவயதினன், முதிர்ந்தவன், மிகவும் முதிர்ந்தவன் என மாறிமாறி பொய்வேடம் போடும் உடம்பிற்கு மெய் எனப்பெயர் வைத்தவர்யாரோ எனத் வினவியும் பாடியுள்ளதை,

"நெஞ்சம் துடித்து ஆயிடுவேன்

ஆக்கை எனும் இடிகரை மெய் என்ற பாவிநான்

மின் அனைய பொய் உடலை நிலை என்றும்

புசிப்புக்கு அலைந்திடும்

புசித்தபின் கண்ணுறங்கு

தேகம் நீங்கும் என எண்ணிலோ

பொய் உடல் நித்தம்புசிப்புக்கு அலைந்திடல்

புசித்தபின் கண்ணுறங்கு

மண்கலத்தேகம்"

என்ற பாடலடிகள் மூலம் உடல் நிலையாமையினை அறிய முடிகின்றது (Sivagyanam, 2016). மின்னலைப் போன்று தோன்றி மறையும், புழுவினால் ஆனநிலையில்லா உடலைக் கொண்டு இறைவனை அடைய முயற்சிப்பதே சிறந்த வழியாகும் என்று மானுடர்களுக்கு விளக்கம் தருகின்றார் தாயுமானவப் பெருமான்.

## மானுடமும் விழுமியமும்

விழுமியம் என்பதற்கு நற்பண்புகளை வளர்த்தெடுத்தல் என்று பொருள் கொள்ளலாம். உயிர் தான் எங்கிருந்து வந்தது எங்கே செல்லப்போகிறது என்பதை உணர்வ தேமானுடர்களின் வாழ்க்கை முறையாகும். நல்லெண்ணம், நற்சிந்தணை, நற்செயல் கொண்ட உயிர்கள் நல்ல தொருநிலையைப் பெறும் என்பது ஞானிகளின் சூளுரையாகும். நல்ல பண்புகளைக் கொண்ட மனிதர்களிடம் நல்லநடத்தை அமையும் நல்ல நடத்தை ஒழுக்கத்தை தீர்மானிக்கும் ஒழுக்கம் அன்பினை வெளிக் கொண்டு வரும் அன்பு அருளைப்பெருக்கும் அருள் துறவினைத் தூண்டித் துறவு முக்திக்கு வழிவகுக்கும். இவ்வாறு மனிதனின் இறுதிப் பயணம் வரை விழுமியக் கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து அடிகோலுகின்றது. மானுடர்களின் உள்ளத்தில் இருக்கும் அன்பினை வெளிக்கொணரவிலை கேட்கும் காலக்கட்டமாகும். அன்பினால் பிணைக்கபட்ட உயிர்களிடத்தில் இறைவன் தஞ்சமாவான். அன்பினை இரக்கம், அருள் என்கின்ற சொல்லாலும் அழைக்கலாம். தாயுமானவர் தன்னை இறைவன் அன்பினால் உயிர்களை அணுக வேண்டும் என்ற போதிலும், தன்னிடம் அணு அளவும் அன்பு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றார்.

“அருளால் எவையும் பார் என்றான்

எள்ளத்தனையும் இரக்கம் இலாவன்பாவி” (Sivagyanam, 2016)

இறைவனை அடைய வேண்டு மெனில் அகத்தே போலித் தன்மை இருக்கக்கூடாது என்று கூறுவதோடு, தான் ஒருபோதும் மெய்யுரைக்காதவன் என்றும் தன்னைத் தானே தூற்றிக்கொள்கிறார்.

“பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே

பொய்த்த மொழி அல்லால் மருந்துக்கும் மெய்மொழி

புகன்றிடேன்” (Sivagyanam, 2016)

உடலில் உயிரின் ஆற்றலைத் தக்க வைக்கப் பேருதவி செய்வது உணவேயாகும். உணவினைத் தேர்ந்தெடுப்பது மனிதர்களின் சுதந்திரமாக இருந்தாலும் அதிலும் அறம் இருக்க வேண்டும் என்பதே சான்றோர்களின் எச்சரிக்கையாகும். ஊனைத் தின்று ஊனைப் பெருக்குவது மாபெரும்பாவமாகும். எந்தவொரு உயிரையும் கொல்லாத மானிடர்களிடம் எத்தன்மை வாய்ந்த தீயகுணம் இருந்தாலும் அவர்களை இறைவன் ஏற்றுக்கொள்வான் என்று உறுதியளிக்கின்றார் தாயுமானவர்.

## கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்

புலனின் பத்தால் சிக்குண்டு கிடக்க வைத்தது இறைவனின் திருவிளையாடலே என வருந்தியும், யான் எனது எனும் செருக்கு அற்றோரது நட்பு கிடைக்க வேண்டும் என்பதையும்,

“யான் எனது அற்றவர் உறவை

என்புலன்மயங்கவேபித்தேற்றிவிட்டாய்”

என்ற வரிகளில் தெளிவுப்படுத்துகிறார் (Sivagyanam, 2016). தாயுமானவர் குறிப்பிடுகின்ற அன்புடைமை, பொய்யாமை, புலால்தவிர்த்தல், கொல்லாமை, நன்நட்பு, பற்று அறுத்தல், புலனடக்கம் போன்ற அடிப்படை விழுமியங்களைப் பின்பற்றினால் இருளில் கிடக்கும் மானுடனின் அறிவு வெளிச்சத்திற்கு வரும் என்றும் குறிப்பிடுகின்றார்.

## மானுடமும் இறையும்

மானுடர்களின் உள்ளத்தையும், உடலையும் இறைக்கட்டுப்பாட்டுடன் இறைவனுக்காக மட்டுமே ஒரு முகப்படுத்தி வழிபட்டால் இறையின்பம் பெறலாம் என்பதே சான்றோர் பெருமக்களின் திருவாக்காகும். மனிதர்கள் தங்களின் வாழ்க்கையில் பசி, பிணி, வறுமை, முதுமை வரும் தருணங்களில் மட்டும் இறைவனை நாடுவதில் பயனில்லை. இன்னல்கள் வருகின்ற சூழ்நிலைகளில் மட்டுமே இறைவனைத் தேடுவதுமானுடத்தின் இயல்பே என்றாலும் அவ்வியல்பை மாற்றி, அனைத்து நிலையிலும் இறைசிந்தனைக்கு மனிதர்கள் முற்படவேண்டும் என்பதே சமயசான்றோர்களின் கருத்தாகும். முதன் முதலில் இறைவழிபாட்டை உடல் வழியில் முறைப்படுத்தி வழிபடவைக்க முயன்ற பெருமை திருமூலப் பெருமானை யேச்சாரும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் பதினெண்சித்தர்களில் ஒருவராகவும் விளங்கும் திருமூலர் ஏனைய சித்தர்கள் போல் உடலினை வெறுப்பதை விடுத்து உடலினுள் உறையும் இறைவனை அடைய முற்படவேண்டும் என்று தனது பாடலின் மூலம் அறிவுறுத்துகின்றார்.

“ஊனை விளக்கி உடன் இருந்தேன்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

காயப்பைக்கு உள்நின்ற கள்வன்” (Manickavasagam, 2016)

இவருக்குப் பின்வந்த சிவவாக்கியார், தாயுமானவர் போன்ற எண்ணற்ற சித்தர்களின் எண்ணத்திற்கு முன்னோடியாகத் திகழ்துள்ளார் திருமூலர். உயிருக்கு ஆதாரமாக இருக்கும் உடலே இறைவன் வாழும் ஆலயமாகும். இத்தன்மையை உணராமல் இறைவன் ஆலயங்களில் இருந்து மட்டும்தான் அருள்புரிவான் என்ற நம்பிக்கையில் மனிதர்கள் பல்வேறு திருத்தலங்களுக்குச் செல்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ள மனிதர்களை நோக்கி சித்தர் சிவவாக்கியார்,

“கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா

கோயிலும் குளங்களும் கும்பிடும் குலமானே

கோயிலும்மனத்துலே குளங்களும் மனத்துளே”

என்ற பாடலின் வழிவிளக்குகிறார் (Thamizh Priyan, 2019). வினைப் பயனைத்துய்ப்பதற்கு ஏதுவாக அமைந்த இவ்வுடலானது இறைவனால் அருளப்பட்டதே என்பதை உணரவேண்டும். இவ்வுடலானது சிற்றின் இச்சைக்குட்பட்டு அழியும் முன்னரே இவ்வுடலினைப் பாதுகாத்து, உடலினுக்குள்ளே பரம் பொருளைத்தேட வேண்டும் என்பதை,

“உடல் பொருள் ஆவியும் தந்தேன்

பூட்டு அற்றுத்தேகம் அற்றுப்போகும் முன்னேநின் அருளை

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே

மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே

இவ்வுடல் நீங்கும்முனே எந்தாய்கேள் இன்னருளாம்

அவ்வுடம்புக்குஉள்ளே அவதரிக்க காண்பேனோ” (Sivagyanam, 2016)

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன.

## முடிவுரை

புறத்தில் கோயில் கட்டுவதற்கே பொருட்செல்வம் தேவை, அகத்தே ஆலயம் அமைக்க எம்பெருமானின் அருட்செல்வம் மட்டும் இருந்தாலே போதும் என்கின்ற கருத்தினைத் திறம் படவிளக்கியமைகின்றார். சிவனை வணங்கும் சீவன்களும் சிவனாக வேண்டும் என்பதே

தாயுமானவரின் திண்ணமாகும். இதற்கேற்ப இப்பெருமானையும் இன்று இறைக்கு இணையாக வைத்துப் போற்றி வருகின்றோம் என்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

## References


Arivoḷi, A. (2019) Sithar Padalgal - Moolamum Uraiyum, Varthamanan Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2016) Bharathiyar Kavithigal, Poombukar Pathippagam, Chennai, India.

Manickavasagam, N. (2016) Thirumoolar Thirumanthiram - Moolamum Vilakkamum, Uma Pathippagam, Chennai, India.

Sivagyanam, V. (2016) Thayumana Swami Padalgal Moolamum Uraiyum, Vijaya Pathippagam, Coimbatore, India.

Thamizh Priyan, (2019) Siddham Thelivikkum Siddhar Sivavaakkiyar Padalgal, Narmadha Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License